மாதம் இரு முறை வெளிவரும் இலவச இதழ், 21 ஜனவரி 2007 - 03 பெப்ரவரி 2007, குரல் 08

# லண்டன் குரல்

Voice of London Tamils



நியூஹாம் பொங்கல் விழாவில் அப்பகுதி மக்களுடன் கவுன்சிலர் போல் சத்தியநேசனும் மேயர் றொபின் வேல்ஸ்ம். ஆறாவது வருடமாக இடம்பெறும் இப்பொங்கல் விழாவை மேயர் தெருவிளக்குகளை ஏற்றி சிறப்பித்தார்.


சுழற்சி நிர்வாகம் – வாசகர் கடிதம் பக்.02


உங்களைத் திருடும் அடையாளத் திருட்டு பக்.03

இந்து ஆலயங்களை அழிக்கிறது மலேசியா பக்.06

வி.புலி உறுப்பினர் நாடுகடத்தப்பட்டார். பக்.07


## தாய்லாந்து கிறடிட்காட் மோசடியில் லண்டன் எஸ்டேட் ஏஜென்ட் உரிமையாளர் உட்பட மூவர் கைது

Estates4U என்ற நிறுவனத்தின் உரிமையாளர் ஞானம் என்ற சிவஞானம் ஞானகாந்தன்(35) தாய்லாந்தில் Surin என்ற இடத்தில் உள்ள Pen Villas ஹொட்டலில் தங்கி இருந்த போது ஜனவரி 3ல் கைது செய்யப்பட்டார். அவர் தங்கியிருந்த அறையில் இருந்து 2,533 பாங்க் காட்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றில் 483 பச்சை காட்கள் ஏனையவை வெள்ளை. தாய் பொலிசார் அங்கிருந்து MSR206 magnetic strip card reader and encoderiயும் கைப்பற்றினர். (தொடர்ச்சி பக்.4)



விலங்கிட்டு கைது செய்யப்பட்ட பத்மதாஸ் கணேச மூர்த்தியை தாய்லாந்து பொலிஸார் விசாரணை செய்கின்றனர். இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பாங்க் காட்கள் மேசையில் அடுக்கி கட்டுகளாக வைக்கப்பட்டு உள்ளது.

## ஆட்கடத்தல் வழக்கில் சந்தேக நபர்கள் விடுதல

வோல்தம்ஸ்ரோவைச் சேர்ந்த மூன்று தமிழ் இளைஞர்களுக்கு எதிரான வழக்கில் தொடர்புடயதாக சந்தேகிக்கப்பட்டவர்கள் விடுதல செய்யப்பட்டனர். ஸ்னேஸ்புறுக் கிறவுன் நீதிமன்றத்தில் இவ்வழக்கு கடந்த ஆண்டு டிசம்பரில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஜனவரி 10க்கு ஒத்தி வைக்கப்பட்டது. ஜனவரி 10ல் போதிய சாட்சியங்கள் ல்லாததால் சந்தேக நபர்கள் விடுதல செய்யப்பட்டனர். கடந்த ஆண்டு ஆட்கடத்தல் தொடர்பாக பொலிசாரினால் கைது செய்யப்ட்ட இவ்விளைஞர்கள் வழக்கின் போது தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

## தமிழர்களின் ஆயுள் 10 ஆண்டுகள் குறைகிறது

இதயநோய் தொடர்பாக கனடிய மருத்துவர்களால் சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஏனைய நாடுகளைக்காட்டிலும் தமிழர்கள் உட்பட தென்னாசியர்கிளின் ஆயுள் 10 ஆண்டுகள் குறைவது தெரியவந்துள்ளது. பக்.2

## தனக்கு அஞ்சலிப் பிரசுரம் வெளியிடும்படி கேட்ட இளைஞர் துக்கிட்டுக் கொண்டார்

"நான் செத்துப் போனால் நோட்டிஸ் அடிப்பீர்களாடா?" என்று கேட்ட இளைஞர் சில நிமிடங்களில் அருகில் இருந்த சவுத் ஹரோ பார்க்கில் துக்கிட்டுக் கொண்டு இறந்தார். இத்துயர சம்பவம் ஜனவரி 5 வெள்ளிக் கிழமை காலை 7:45 மணியளவில் இடம்பெற்றது. பத்தொன்பதே வயதான சத்தியமூர்த்தி டினேஸ் என்பவரே இவ்வாறு தற்கொல செய்து கொண்டார். வற்போட் அஸ்டா மற்றும் செயின்ஸ்பறி சுப்பர் மார்க்கற்றில் வேலை செய்து வந்த இந்த இளைஞர் 2000ல் பிரித்தானியாவுக்கு பெற்றோரின் ஸ்பொன்சரில் புலம்பெயர்ந்தார். இவர் பிரித்தானிய கடவுச் சீட்டடையும் பெற்றிருந்தார். (தொடர்ச்சி 7ம் பக்கம்)






துக்கிட்டு இறந்த சவுத்கரோ பார்க்

**உண்மைகள் உறங்குவதில்லை.**

21 ஜன 07 - 03 பெப் 07, குரல் 08

லண்டன் குரல்

## உங்கள் இதயங்களை துடிக்க வையுங்கள்

கனடிய மருத்துவர்கள் இதயநோய் தொடர்பாக 52 நாடுகளில் 30,000 நோயாளிகளை ஆய்வு செய்ததில் ஏனைய நாடுகளைக் காட்டிலும் தமிழர்கள் உட்பட தென்னாசியர்களின் ஆயுள் 5 முதல் 10 ஆண்டுகள் குறைவது தெரியவந்துள்ளது. 1.5 பில்லியன் மக்களைக் கொண்ட இந்த மக்கள் கூட்டம் தமது பாரம்பரிய பிரதேசங்களை விட்டு புலம்பெயர்ந்து வந்த போதும் அவர்களிடம் இந்த நோயின் தாக்கம் அதிகமாகவே காணப்படுகிறது. இது புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் பிறக்கும் பிள்ளைகளிடமும் காணப்படுவதை இந்த மருத்துவ அய்வு உறுதிப்படுத்தி உள்ளது.

இந்த ஆய்வில் உள்ள நல்ல செய்தி என்னவென்றால் இந்நோய்க்கான காரணிகள் எமது வாழக்கைமுறையால் நீக்கக் கூடியவை. பாரம்பரியம், வயது பாலியல் இவை எல்லாம் தனிநபர்களின் கட்டுப்பாட்டு எல்லைக்கு அப்பாற்பட்டது. ஆனால் பழக்க வழக்கங்கள் வாழ்வுமுறை எல்லாம் தனிநபர்களின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் உட்பட்டவை. இவற்றை மாற்றி அமைப்பதன் மூலம் பல்லாயிரம் பேர் தமது இதயங்களைத் துடிக்க வைக்க முடியும்.

இதய நோய் ஒரு தொற்றுவியாதி யாக இல்லாவிட்டாலும் உலகம் முழுவதும் இந்நோய் பெரும் உயிர்க் கொல்லியாக உள்ளது. அதிலும் குறிப்பாக தமிழர்களாகிய நாம் இந்நோயால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகளை அதிகம் கொண்டிருப்பது உறுதியாக உள்ளது. இது சம்பந்தமான விழிப்புணர்வு மிக அவசியம்.

பிரித்தானியாவில் உள்ளவர்கள் British Heart Foundatio அமைப்புடன் தொடர்பு பொண்டு அவர்களுடைய The BHF Family Heart Study ஆய்விற்கு உதவ முடியும். உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பின்படி 17 மில்லியன் மக்கள் இதய நோயால் இறந்துள்ளனர். விரைந்து செயற்படுங்கள். வாழும் நாட்களை கூட்டிக் கொள்ளுங்கள். மேலதிக தொடர்புகளுக்கு:

www.bhf.org.uk

ஆசிரியர்: த ஜெயபாலன்
ஆசிரியர்குழு: Dr பி சிவக்குமார், ஆர் சுரேஸ்குமார்
நிர்வாகம்: ரி கொன்ஸ்ரன்ரைன், ஜோ ஜெயவேந்தன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK

செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 079 1944 4994

'லண்டன் குரல்' பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'லண்டன் குரல்' பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

### குமார் பொன்னம்பலத்தின் லண்டன் நினைவுக் கூட்டத்தில் சலசலப்பு

## லண்டனில் ரெலோ பா உ க்கள் சங்கடத்தில்

தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் அஞ்சலிக் கூட்டம் இல்போர்ட் செல்வ விநாயகர் ஆலய மண்டபத்தில் இடம் பெற்றது. இல்போர் தொகுதி கவுன்சில் வேட்பாளர் ஜெயரஞ்சன் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார். ஜனவரி 6ல் இடம்பெற்ற இந்நிகழ்வில் ரெலோ பாராளுன்ற உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், சிறிகாந்தா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் அப்பகுதி பாராளுன்ற உறுப்பினர் மைக் கேற்றும் கலந்து கொண்டார்.

நிகழ்வின் போது தமிழீழத்தை ஒரு காலத்தில் எதிர்த்த குமார் பொன்னம்பலத்திற்கு படம் வைத்து அஞ்சலி செலுத்த வந்திருக்கிறீர்கள் ஏன் உங்கள் (ரெலோ) தலைவர் சிறிசபாரத்தினம், அமிர்தலிங்கத்தின் படங்கள் எங்கே என்று அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அது பற்றி சிறிகாந்தா லண்டன் குரலுக்கு தெரிவிக்கயில் "அந்தக் கேள்வி எழுப்பப்பட்ட போது நான் அந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கவில்லை. நான் அந்தக் கூட்டத்திற்கு வந்த பொழுது அந்தக் கேள்வி எழுப்பப்பட்டதாகச் சொல்லப்பட்டது. நாங்கள் அஞ்சலி செலுத்தவில்லை என்ற அவர்கள் எப்படிச் சொல்ல முடியும். எங்களுடைய ஒவ்வொரு கூட்டமும் அது பொதுக்குழுக் கூட்டமாக இருந்தால் என்ன, மத்திய குழுக் கூட்டமாக இருந்தாலென்ன, தலைமைக் குழுக் கூட்டமாக இருந்தாலென்ன அந்தக் கூட்டமே ஆரம்பிப்பது மறைந்த



பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான சிறிகாந்தா



ரெலோ இயக்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம்.

எமது முன்னோடிகள், தலைவர்கள், போராளிகள் பொது மக்களுக்கு அஞ்சலி செலுத்தியே ஆரம்பிக்கப்படுகிறது.

அவர்களுடைய நினைவுகள் எங்கள் இதயங்களோடு கலந்திருக்கின்றது. நாடி நரம்புகளோடு இணைந்திருக்கின்றன. அப்படி இருக்கையில் இவர்கள் எப்படி நாங்கள் அஞ்சலி செலுத்தவில்லை என்று சொல்ல முடியும். இது ஒரு அபத்தமான கேள்வி. நேர்மையீனமான கேள்வி. குதர்க்கமான கேள்வி. ஒருவேளை இது அரசியல் அறியாமை காரணமாகக் கூட ஏற்பட்டிருக்கலாம்" எனத் தெரிவித்தார்.

கேள்வியை எழுப்பியவர் தாகாத வார்த்தைகளையும் பிரயோகித்ததாக கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் லண்டன் குரலுக்குத் தெரிவித்தார். பெண்களும் குழந்தைகளும் உள்ளார்கள் பார்த்துக் கதைக்கும் படி கேட்டுக் கொண்ட போதும் கேள்வியை எழுப்பியவர் அதனை சட்டை செய்யவில்லையென பெயர் குறிப்பிட விரும்பாத அந்நபர் எம்மிடம் முறையிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தான் அல்லது சிவாஜிலிங்கம் பயணம் செய்த வாகனம் உடைக்கப்பட்டதாகவும் கூட்டம் குழப்பப்பட்டதாகவும் சில இணையத்தளங்கள் உண்மைக்குப் புறம்பாக செய்தி வெளியிட்டதாகவும் சிறிகாந்தா தெரிவித்தார்.

எமக்கு கிடைத்த தகவலின் படி அங்கு ஒரு காருடைய கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது. இச்சம்பவங்களை உறுதிப்படுத்திய ஒருவர் இவை பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் ஜனநாயகம் பற்றி பேசுபவர்கள் தாங்கள் அதற்குத் தக்க முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

## சுழற்சி நிர்வாகம் - வாசகர் கடிதம், இராஜமனோகரன் லண்டன்

ஹரோ பாடசாலையின் புதிய வருடத்திற்கான 2006-2007 நிர்வாகத் தெரிவு புரிந்து கொள்ளமுடியாத புதிய சுழற்சியை தோற்றுவிக்கிறது. கடந்த 18 வருடங்களுக்கு மேலாக எமது மொழி, கலை, கலாச்சாரம் என்பவற்றின் நேசிப்பின் வெளிப்பாடாக உருவாகிய ஹரோ தமிழ் பாடசாலையின் நோக்கம் எமது மொழியையும் கலையையும் வளர்க்க வேண்டும் என்பதே. பாடசாலையின் வளர்ச்சிக்காக பல கலைப்பிரிவுகளை ஆரம்பித்து சிறந்த ஆசிரியர்களை தெரிவு செய்து கல்வியின் தரத்தை உயர்த்தி மாணவர்களின் வளர்ச்சிக்கும் செயல்பாட்டிற்கும் வழிகோலினர். இதனால் பெற்றோர்களின் நன்மதிப்பைப் பெற்று பாடசாலையின் நிலை உயர்ந்தது. ஆகவே பாடசாலையின் வளர்ச்சிச் செயற்பாடுகளுக்கு அனைவரும் தங்களின் முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தனர். ஆனால் மூலம் எந்த வர்க்க அரசியல் வியாபார செயல்திட்ட நோக்கம் தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை.

ஆனால் கடந்த 2004 இற்குப் பின்பு தமிழ் பாடசாலையின் செயற்பாடுகளில் பெரிய பெரிய மாற்றங்களை காணமுடிந்தது. இவை எல்லாம் பக்க சார்பு அரசியலை நோக்கி செல்கின்றதோ என்று தோன்றுகின்றது. தமிழ்பாடசாலை என்றதை ஆங்கில தமிழ் பாடசாலை என்று ஆங்கில முலாம் பூசுவதன் மூலம் இவர்கள் ஒரு ஆங்கில மேலாதிக்க வெளிப்பாட்டை வெளிப்படுத்துகின்றனர்.

2006-2007ம் வருடத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு இதை மிகத் தெளிவுபடுத்துகிறது. புதிய வருடத்திற்கான நிர்வாகம் கடந்த பல வருடங்களாக செயல்பட்டவர்களையே மீண்டும் மீண்டும் ஒரு சுழற்சி முறையில் தெரிவு செய்யப்படுகின்றனர். ஏதோ குடும்ப வாரிசுகளின் சுழற்சி நிர்வாகம் போல் தோற்றமளிக்கிறது. இது தனிமனித ஆளுமையின் பிரதிபலிப்பா? அல்லது ஒரு குழு நிலையின் ஆழுமையா என்று தெரியவில்லை. ஆனால் எல்லாமே முன் திட்டமிட்ட செயல்பாடுகள் போல் தெரிகிறது. இவற்றுக்கெல்லாம் ஆலோசனைக்குழு ஒன்று செயல்படுத்தப்படுகின்றதோ என்றதொரு உணர்வும் எழுகின்றது.

தமிழ் பாடசாலையின் வளர்ச்சிக்கும் ஊழலற்ற நிர்வாகத்திற்கும் புதியவர்களை நிர்வாகத்தில் சேர்த்தால் அவர்களின் திறமை, விவேகம், புதிய செயல்வடிவங்கள் பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் கிடைப்பதுடன் ஒரு நேர்மையான ஊழலில்லாத சிறந்ததொரு நிர்வாகத்தையும் ஏற்படுத்த முடியும். இது ஒரு சிறந்த ஜனநாயகத்தின் முதல்படி என்பதுடன் அனைத்து பெற்றோர்களின் சமபங்குதலும் கிடைக்கும். புலம் பெயர் ஜனநாயகம் பேசும் இந்த அதிமேதாவிகள் தங்களின் ஆக்க வெளிப்பாடுகளில் நல்லதொரு நேர்மையான ஜனநாயகத்தை நடைமுறையில் செயல்படுத்த முற்படுவார்கள் என எதிர்பார்ப்பதுடன் ஜனநாயகம் ஜனநாயகம் என்று வார்த்தைகளில் சொல்வதால் ஜனநாயகம் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அதை செயல் முறையில் காட்ட வேண்டும்.

பாடசாலையின் கீதத்தை மட்டும் தமிழில் வைத்து "எம் மொழி தமிழ் வாருங்கள் தமிழ் படிப்போம்" என்று கீதத்தில் நாதமிசைப்பதை விட்டு, மேலைத்தேச தேசியத்தின் செயல்முறையை நோக்கி செல்வதை தவிர்த்து எந் நோக்கத்திற்காக இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை ஓரளவிற்கேனும் நிவர்த்தி செய்து எதிர்வரும் காலங்களில் என்றாலும் நல்லதொரு ஜனநாயகத் தெரிவுகளும் செயல்பாடுகளும் வெளிப்படுவதுடன் இப்பாடசாலையின் நலன் கருதி எல்லோரும் ஒன்றிணையுங்கள்.

வளர்க தமிழ் பாடசாலை




வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயத்தில் டிசம்பர் 26ல் இடம்பெற்ற சுனாமி நினைவு நிகழ்வில் கவுன்சிலர் போல் சத்தியநேசன் உரையாற்றுகிறார்.

## வர்த்தகர்கள் முறையிட்டாலே நடவடிக்கை எடுக்க முடியும்


### வோல்தம்ஸ்ரோ இன்ஸ்பெக்ரர்

வோல்தம்ஸ்ரோ வர்த்தக நிலையங்கள், சமூக, சமய நிறுவனங்கள் ஜனவரி 16ல் அப்பகுதி பொலிஸாரைச் சந்தித்து கலந்துரையாடினர். வோல்தம்ஸ்ரோ இன்ஸ்பெக்ரர் கோர்னர்ஸ் மற்றும் அதிகாரிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். அப்பகுதி தமிழ் இளைஞர்கள் னால் வர்த்தக நிலையங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி ஒவ்வொருவரும் எடுத்துக் கூறினர்.

குற்றச்சாட்டுகளை செவிமடுத்த இன்ஸ்பெக்ரர் சம்பவங்களை கூறுவதுடன் மட்டும் நின்றுவிடாது அவை பற்றி உத்தியோகபூர்வமாக முறையிட்டால் மட்டுமே தங்களால் நடவடிக்கை எடுக்க முடியும் என்று தெரிவித்ததாக இச்சந்திப்பில் கலந்து கொண்ட ஒரு வர்த்தகர் லண்டன் குரலுக்குத் தெரிவித்தார். வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் கூடி நிற்கும் இளைஞர்களை கலைந்து செல்ல உத்தரவிட முடியும் ஆனால் அதற்கும் தங்களிடம் முறைப்பாடுகளை பதிவு செய்தால் மட்டுமே அதற்கான நடவடிக்கையை எடுக்க முடியும் என இன்ஸ்பெக்ரர் தெரிவித்ததாக அவ்வர்த்தகர் மேலும் தெரிவித்தார்.

உண்மைகள் உறங்குவதில்லை.

# உங்களைத் திருடும் அடையாளத் திருட்டு




பிரிட்டனில் மட்டும் 4 மில்லியனுக்கும் அதிகமானோர் இதுவரை அடையாளத் திருட்டுக்கு உள்ளாகி உள்ளனர் என்று டிசம்பர் 11ல் வெளியாகிய செயின்ஸ்பரி வங்கியின் அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. 1999 இலிருந்து 500 வீத அதிவேக அதிகரிப்பை இது எட்டியுள்ளது. கிரிமினல்கள் அப்பாவிகளின் அடையாளத்தைத் திருடி அதனைப் பயன்படுத்தி வங்கிகளில் பணம் எடுப்பதும், பொருட்களையும், சேவைகளையும் பெற்றுக்கொள்வதும் இன்று இலகுவான திருட்டுத் தொழிலாகி உள்ளது.

அன்றாடக் கழிவுக் குப்பைகளைத் தோண்டியே பல மோசடிக்காரர்கள் இத்தகவல்களை எடுக்கிறார்களாம். இதன் பாதிப்பு பூதாகாரமாக இருந்த போதிலும் பொது மக்கள் இது தொடர்பான விழிப்புணர்வினை இன்றுவரை பெறமுயலவில்லை என அவ்வறிக்கை குற்றஞ்சாட்டி உள்ளது. அடையாளத் திருட்டை மேற்கொள்பவர்கள் திட்டமிட்ட பெரும் வலையமைப்பைக் கொண்டவர்களாக இருப்பதாக இவ்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் மூன்றில் ஒரு நபர் தாம் வங்கிக் கடிதங்களையும் முக்கிய ஆவணங்களையும் அழிக்காமல் முழுமையாகவே குப்பைக் கூடையிலிடுவதாகத் தெரிவித்து உள்ளனர். பத்தில் ஒருவர் வங்கிக் கடன் நிறுவனம் வழங்கும் மாத அறிக்கையை கிழிக்காமல் குப்பையில் இடுவதாகத் தெரிவித்து உள்ளனர். சராசரியாக அடையாளத் திருட்டால் பாதிக்கப்பட்ட ஒருவரின் நட்டம் 3,039 பவுண்கள் என்று மதிப்பிடப்படுகின்ற போதிலும் பாதிக்கப்பட்டவர்களில் 6 சத வீதத்தினர் தமது இழப்பு 10,000 பவுண் வரை சென்றதாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

மேலதிக தகவல்களுக்கு www.identitytheft.org.uk/protect-yourself.htm

## அரசுக்கு எதிரான தனி மனித எதிர்ப்பு

ஈராக் யுத்தத்தில் பிரித்தானிய ஈடுபாட்டுக்கு எதிராகக் குரல்கொடுத்த யுத்த எதிர்ப்பாளர்கள் பிரித்தானிய பொலிஸ் திணைக்களத்திற்கெதிராகத் தொடுத்த வழக்கொன்றில் பிரிட்டனின் உயர் நீதிமன்றம் பொலிசாருக்கு எதிராகத் தன் தீர்ப்பினை டிசம்பர் நடுப்பகுதியில் வழங்கி உள்ளது.

2003 மார்ச் மாதம் 22ம் திகதி, ஈராக் மீது போர்தொடுக்க ரொனி பிளயார் அரசு இராணுவத்தை அனுப்பி வைத்த விமான நிலையமான கொல்செஸ்டரில் உள்ள பெயார்போர்ட் விமானப்படை விமானத் தளத்தை நோக்கி 120 யுத்த எதிர்ப்பு ஆதரவாளர்கள் பேருந்துத் தொடரணியில் பயணித்தனர். அவ்வேளையில் இவர்கள் பயணம் செய்த பேருந்து அணி கொல்செஸ்டர் பொலிசாரால் இரண்டரை மணிநேரம் தடுத்து நிறுத்தப்பட்டதுடன் அங்கிருந்து பலத்த காவலுடன் லண்டனுக்குத் திசைதிருப்பிக் கொண்டுசெல்லப்பட்டது.

பொலிசாரின் இந்த அத்துமீறல்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தின் அப்பீல் விசாரணையின் போது பொலிசார் பேருந்துகளில் சட்டவிரோதமாகத் தடுத்து வைத்ததை மாத்திரமே குற்றமாகக் கருதி அப்பீல் நீதிமன்றம் முன்னர் தீர்ப்பு வழங்கியிருந்தது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து மேலவைக் குழுவிடம் முறையிட்ட எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவாக மேலவைக்குழு House Of Lords தனது மீள்விசரணையின் போது தீர்ப்பு வழங்கியுள்ளது.

மேலவைக்குழுத் தலைவர் லோர்ட் பிங்ஹாம் குறிப்பிடும் போது, இந்த வழக்கு மனித உரிமைகள் மீதான முக்கிய கேள்விகளை எழுப்பி உள்ளதாகக் குறிப்பிட்டு உள்ளார். அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிரான தனிமனிதனின் தார்மீக எதிர்ப்பினையும், அவ்வெதிர்ப்பினை அடக்குவதற்கு பொலிஸ் அதிகாரம் பயன்படுத்தப்படுவதும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

கொல்செஸ்டர் பொலிஸ் பேச்சாளர் கருத்துத் தெரிவித்த போது, இது தொடர்பான பொலிஸ் அதிகார நடைமுறைகளைத் தாம் மீளாய்வு செய்யவுள்ளதாகவும் சமாதான முறையில் நடத்தப்பட்ட எதிர்ப்பாளர்களின் குரலை அடக்க பொலிஸ் அதிகாரத்தைப் பயன்படுத்தியதற்கு தாம் வருத்தம் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

எதிர்ப்பாளர்களுக்காக வாதாடிய வழக்கறிஞர் ஜோன் ஹால்போர்ட் குறிப்பிடும் போது இதுவொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு என்று மகிழ்ச்சி தெரிவித்தார்.

## மக்களைப் பற்றி அக்கறையில்லை

### மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு குற்றச்சாட்டுகிறது

இலங்கை அரசாங்கமும் வி.புலிகளும் மக்கள் நலன் பற்றிய அக்கறையின்றி இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவ தாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு (Human Right Watch HRW) குற்றம் சாட்டியுள்ளது. ஜனவரி 11ல் இவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் பொது மக்களை கொல்வது, எழுந்தமானமான வான் தாக்குதல்கள், சிறார்களை இராணுவத்தில் சேர்க்க துணைபுரிவது போன்றவற்றில் அரச படைகள் ஈடுபடுவதாக குற்றம்சாட்டியுள்ளது. மறுமுனையில் வி.புலிகள் மக்களை கண்ணி வெடிகளால் கொல்வது, தற்கொலைத் தாக்குதல்கள், அரசியல் எதிரிகளை படுகொலை செய்வது, சிறார்களை படைகளில் சேர்ப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ளதாக அவ்வமைப்பு குற்றம்சாட்டி உள்ளது.

ஜனவரி 16ல் வெளியான ஐ நா அறிக்கை தொடர்ந்தும் அரச படைகளின் உதவியுடன் கருணா குழுவினரும் வி.புலிகளும் சிறார்களை படையணிகளில் சேர்ப்பதாகக் குற்றம்சாட்டியுள்ளன.

## ஒரு பவுணுக்கு பணிபுரியும் பட்டதாரிகள்


இங்குள்ள பிரித்தானிய தொழிலாளர்களிலும் அதிகம் கல்வி அறிவுள்ளவர்களாக இருந்த போதிலும் தொழில் வாய்ப்புகளில் புதிய குடிவரவாளர்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதாக டிசம்பர் முற்பகுதியில் Bank of England வெளியிட்ட அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

அபாயகரமான தொழிற் சூழலும், பொருத்த மற்ற தொழில்களும், குறைந்த வேதனமும், மோசமான வாழ்க்கைத் தரமுமே அவர்களில் பெரும்பான்மையானோரால் எதிர்கொள்ளப்படுவதாக அவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. ஆங்கில மொழிப் புலமை இன்மையும், தொழிற்சட்டங்கள் மற்றும் அடிப்படை மனித உரிமைகள் பற்றிய தகவல் இன்மையும், சமூகத்தில் அவர்கள் மேல் காட்டப்படும் காழ்ப்புணர்ச்சியும் இதற்குக் காரணமாகின்றன. அபாயகரமான சுகாதாரக் குறைவான சூழலில் வேலைசெய்யும் ஒரு குடிவரவுத் தொழிலாளி மணித்தியாலத்திற்கு ஒரு பவுண் ஊதியம் பெறுவதைக்கூடத் தாங்கள் கண்டறிந்துள்ளதாக அவ்வறிக்கை குறிப்பிடுகின்றது.



பிரித்தானியாவில் பிறந்து வளர்ந்த தொழிலாளியிலும் பார்க்க குடிவரவுத் தொழிலாளி அதிகக் கல்வியறிவு மிக்கவராக இருந்த போதிலும், தரம் குறைந்த தொழில் வாய்ப்பே அவருக்கு வழங்கப்படுகின்றது. கடந்த 2 வருடங்களுக்குள் இந்நாட்டுக்குள் வந்துள்ள குடிவரவாளர்களில் 45வீதத்தினர் பட்டதாரிகளாகக் காணப்படுகின்றனர். பிரித்தானிய தொழிலாளர்களில் 17 வீதமானவர்களே பட்டதாரிகளாக உள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

## பயணக் கட்டண உயர்வு



பயணக் கட்டணம் உயர்ந்துள்ளது என்பதை லண்டன் மேயர் கென் லிவிங்ஸ்டன் ஜனவரி 9ல் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் ஏற்றுக்கொண்டு உள்ளார். இருந்தும் அவர் இவ்வாண்டுக்கான கட்டணத்தை தொடர்ந்தும் உயர்த்தி உள்ளார். ஜனவரி முதல் ஒரு தனிப் பயணத்திற்கு 4 பவுண்கள் முடிகின்றது. இது ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மூன்று மடங்கு அதிகமாக உள்ளது. கட்டண உயர்வை நியாயப்படுத்திய மேயர் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் பயணக் கட்டணம் குறைவாகவும் வரி அதிகமாகவும் இருப்பதாகவும் தெரிவித்தார்.




தற்போதைய கட்டண உயர்வு ஒயிஸ்ரர் காட் பயன்படுத்தாதவர்களையே பெருமளவு பாதிக்க உள்ளது. ஒயிஸ்ரர் காட் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதே இதன் முக்கிய நோக்கமாக உள்ளது. தற்போது 10 மில்லியன் பேர் ஒயிஸ்ரர் காட்டை பயன்படுத்துகிறனர்.

## ரிமோட் விளையாட்டு விமானங்களுக்கு இலங்கையில் தடை

ரிமோட் கொன்றோலில் இயங்கும் விளையாட்டு விமானங்களுக்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ளது. இவ்வகை விமானங்கள் குண்டுத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தக் கூடியவை என்பதால் இவை நாட்டுக்குள் அனுமதிக்கப்பட மாட்டாது என Telecommunication Regulatory Commission ஜனவரி 11ல் அறிவித்துள்ளது.



**உண்மைகள் உறங்குவதில்லை.**


முன்பக்கத் தொடர்ச்சி.....

## லண்டன் எஸ்டேட் ஏஜெண்ட் உரிமையாளர் உட்பட மூவர் கைது

இதற்கிடையே வி.புலிகள் பிரித்தானிய பிரஜைகளிடம் இருந்து நூற்றுக் கணக்கான மில்லியன் கணக்கான பவுண்களை அவர்களது கிறடிட்காட்களை பிரதிசெய்து (by cloning ATM bank cards) களவாடி இருக்கலாம் என Humberside Police ஜனவரி 16ல் தெரிவித்துள்ளது. இவ்வாறு பிரதிசெய்யப்பட்ட காட்களை பயன்படுத்தி வி.புலிகளின் செயற்பாடுகள் அதிகமாக உள்ள பாங்கொக் மற்றும் ஜேர்மனியில் உள்ள ATM Machineல் இருந்து பணத்தை பெறுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ள Detective Inspector Paul Welton, of Humberside Police, ஏழு பேர் கொண்ட தனது குழு இந்த தொடர்பு சம்பந்தமான விசாரணையை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

DI Paul Welton மேலும் தெரிவிக்கையில் நூற்றுக் கணக்கான சிலசமயம் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் எரிபொருள் நிரப்பச் செல்லும் Jet garage (in Princes Avenue, west Hull), இந்த மோசடிக்கு பலியாகி இருக்கலாம் எனவும் தெரிவித்தார். மேற்படி கராஜில் இருந்த ATM Machineயை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்கு விபரங்களை பிரதிசெய்து அதனைப் பயன்படுத்தி உலகின் பல பாகங்களிலும் இருக்கும் ATM Machineல் இருந்து வாடிக்கையாளரின் பணம் களவாடப்பட்டு இருப்பதாக DI Paul Welton தெரிவிக்கிறார்.

தாய்லாந்தில் சிவஞானம் ஞானகாந்தன் கைது செய்யப்படுவதற்கு முன்தினம் ஜனவரி 2ல் Thaweewong Rd ல் உள்ள ATM machineல் மோசடி செய்யப்பட்ட காட்டைப் பயன்படுத்தி பணத்தை எடுத்ததை CCTV cameraல் பார்த்த பொலிசார் பத்மதாஸ் கணேஸமூர்த்தி (26), சிறிகாந்தன் வீரசிங்கம் (29) ஆகிய இருவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட போது ஒருவர் சில்வர் நிற ஹொண்டா காரிலும் மற்றவர் கடற்கரையிலும் இருந்தனர். அவர்களுடைய காரை சோதணையிட்ட பொலிசார் 2,703 வெள்ளை பாங்க் காட்களையும் a notebook computerயும் மூன்று flash drivesயும் கைப்பற்றினர். தங்களை விடுவிக்க 30,000 பவுண் (2 மில்லியன் பாற்) லஞ்சம் வழங்க இவர்கள் முயன்றதாக தாய் பொலிசார் தெரிவிக்கின்றனர்.




இவர்கள் இருவரும் ஆரம்ப விசாரணைகளில் காரில் கைப்பற்றப்பட்ட பொருட்கள் முன்னதாக தாய்லாந்து வந்தடைந்த ஞானகாந்தனுடையது என்று தெரிவித்து உள்ளனர். இவ்விருவருமே அன்று தாய்லாந்து வந்தடைந்த ஞானகாந்தனை விமான நிலையத்தில் இருந்து அவர் தங்கி இருந்த ஹொட்டலில் இறக்கிவிட்டுள்ளனர்.

சிவஞானம் ஞானகாந்தன், பத்மதாஸ் கணேஸமூர்த்தி, சிறிகாந்தன் வீரசிங்கம் என்ற மூன்று சந்தேக நபர்களும் சர்வதேச மோசடிக் கும்பலுடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என இவர்களை புலனாய்வு செய்துவரும் Inspector Pol Lt Col Boonlert Onklang தெரிவிக்கிறார். அவர் மேலும் தெரிவிக்கையில் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 5,236 வங்கிக் காட்களில் 2,300 காட்களில் களவாடப்பட்ட தகவல்கள் பதிவு செய்யப்பட்டு ATM machineல் பயன்படுத்துவதற்கு தயாராக இருந்தது என்று கூறினார். ஏனைய காட்கள் களவாடப்பட்ட தகவல்கள் பதிவு செய்யப்படுவதற்கு காத்திருந்தன என்றும் தெரியவருகிறது. இம் மூவருமே தாய்லாந்திற்கு அடிக்கடி பயணம் செய்வது அவர்களது பாஸ்போட்டில் இருந்து தெரிய வந்துள்ளது. இவர்கள் பிரபல்யமான உல்லாச மையங்களை மையப்படுத்தி தங்கள் மோசடிகளை நடத்துவதாகவும் Inspector Pol Lt Col Boonlert தெரிவித்தார்.

சந்தேக நபர்களான சிவஞானம் ஞானகாந்தன், பத்மதாஸ் கணேஸமூர்த்தி, சிறிகாந்தன் வீரசிங்கம் ஆகியோர் மீது எலக்ரோனிக் காட் மோசடி, மற்றும் பயன்படுத்தும் நோக்கத்துடன் மோசடியான எலக்ரோனிக் காட்டை வைத்திருந்தது ஆகிய இரு குற்றங்கள் பதிவு செய்யப்பட்டது.

ஜனவரி 6ல் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வங்கிக் காட்களை பார்வையிட்ட Thai Military Bank அலுவலர்கள் அவற்றில் 2,300 காட்களில் பெரும்பாலும் பிரித்தானிய வங்கிக் கணக்காளர்களின் தகவல்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தி உள்ளனர். அமெரிக்கா, பின்லாந்து, சுவீடன் ஆகிய நாட்டு வங்கிக் கணக்காளர்களின் தகவல்களும் சில காட்களில் பதிவு செய்யப்பட்டிருந்ததாக Thai Military Bank அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடிக்கு யாருடைய வங்கிக் கணக்குகள் எல்லாம் களவாடப்பட்டது என்ற முழு விபரத்தையும் பொலிசார் இன்னமும் கண்டறியவில்லை. ஆனால் debit மற்றும் credit காட்களின் தகவல்கள் களவாடப்பட்டு இவர்களால் பயன்படுத்தப்பட்டு உள்ளதை பொலிசார் உறுதிப்படுத்துகின்றனர்.

லண்டனில் உள்ள இளைஞர் குழுக்களை பயன்படுத்தி வங்கிக் காணக்காளர்களின் காட்களின் தகவல்களைச் 16-digit card number, card expiration date and four-digit pin code என்பவற்றைச் சேகரித்து தொலைபேசியூடாகவோ மின் அஞ்சல் மூலமாகவோ சந்தேக நபர்களுக்கு அனுப்ப தாய்லாந்தில் உள்ள அவர்களது சகாக்கள் அத்தகவல்களை MSR206 magnetic strip card reader and encoder மூலம் காட்களில் பதிவு செய்கின்றனர்.

இவர்கள் ஒரு நேரத்தில் ATM machineல் இருந்து 2000 முதல் 5000 பற் வரையான பணத்தை எடுக்கின்றனர். இவர்கள் மொத்தமாக 6 மில்லியன் பற் பணத்தை எடுத்ததாக தாம் நம்புவதாகக் கூறுகிறார் Inspector Pol Lt Col Boonlert. ஆனால் சந்தேக நபர்கள் அதில் 10 வீதத்தையே தாம் எடுத்ததாக ஒப்புக் கொள்கின்றனர். 90 வீதம் வெளிநாட்டில் உள்ள தங்கள் குழுவுக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் Kathu பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். மேலதிக விசாரணைகளுக்காக ஜனவரி 15ல் இவர்ளை தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்கான அனுமதியை தாய் பொலிசார் நீதிமன்றத்திடம் கோர உள்ளனர்.

இந்த சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மோசடி காட்களும் பாங்கொக், சொன் புரி ஆகிய இடங்களில் முன்னர் கைப்பற்றப்பட்ட மோசடி காட்களும் ஒரே மாதிரியானவையென பொலிசார் தெரிவிக்கின்றனர்.

தாய்லாந்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கும் வி.புலிகளுக்கும் தொடர்புள்ளதா என்பது பற்றிய விசாரணைகள் தொடர்கின்றன. இவ்வாறான பெரும்பாலான மோசடிகளில் கைது செய்யப்படுபவர்கள் தங்களது குற்றங்களை நியாயப்படுத்த வி.புலிகளை பயன்படுத்தும் சம்பவங்களும் இடம்பெறுவது கவனிக்கத்தக்கது.

## நீங்களும் போதகர் ஆகலாம்



உங்களுக்கு கிறிஸ்தவ போதகர் ஆக வர விருப்பமா? நீங்கள் இந்து என்ற கவலையா? உங்கள் பிள்ளைக்கு ஒரு நல்ல கிறிஸ்தவ பாடசாலையில் இடம் கிடைக்க வேண்டுமா? புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உங்களுக்கு நல்ல அந்தஸ்து கிடைக்கவில்லை என்ற வருத்தமா? கவலையை விடுங்கள். பின்வரும் கேள்விகள் எல்லாவற்றுக்கும் நீங்கள் ஆம் என்று பதில் அளித்தால் நீங்களும் பாஸ்டர் (pastier) கந்தையா ஆகவோ, பிரதர் (brother) முருகவேல் ஆகவோ, அல்லது சிஸ்டர் (sister) சரஸ்வதி ஆகவோ உடன் வந்து விடலாம்.

இதோ உங்களுக்கான கேள்விகள்

1. உங்களால் உரக்க கதற முடியுமா?
2. உங்களால் நன்றாக கையை அகல விரித்து கண்ணை இறுக்க மூடி அதே நேரம் பேசவும் முடியுமா?
3. உங்களால் தமிழ் வாசிக்க முடியுமா?
4. உங்களுக்கு சொட்டு ஆங்கிலம் வருமா? (கொண்ணை ஆங்கிலம் என்றாலும் பரவாயில்லை)
5. உங்களால் எங்காவது 2000 பவுண் பிரட்ட முடியுமா? (ஆண்டவன் விசயம் கள்ள காட் போட்டாலும் பரவாயில்லை)

உங்களால் மேலுள்ள 5 வினாக்களுக்கும் ஆம் என்று பதில் அளிக்க முடிந்ததா? வாழ்த்துக்கள்.

நீங்களும் இனி ஒரு பாஸ்டர். இனி நீங்கள் இரண்டாவது கட்டத்துக்கு போக வேண்டும்.

1. எங்காவது 50 பேர் கூடக்கூடிய இடம் ஒன்று வேண்டும். (நட்டமாகி போய் மூடிய மரக்கறி கடை, பழைய கராஜ் ஆகியவை உகந்த இடங்கள்)
2. இரண்டு அல்லது மூன்று வசனங்களை பைபிளிலிருந்து பொறுக்கி எடுத்துப் போட்டு 2000 நோட்டீஸ் அடிக்க வேண்டும். இதில் பிணி, சூனியம், நோய் குணமடையும், ஊனமுற்றோர் எழும்பி நடப்பர், கையில்லாதவர்கள் மாபிள் அடிப்பார்கள் என்றெல்லாம் எழுத வேண்டும்.
3. பின்னர் கடைசி கட்டமாக உங்களின் சகோதர சகோதரிகள், மனிசியின் தம்பி, தங்கை, சகோதரர் பிள்ளைகள் எல்லோரையும் கூப்பிட்டு பாட்டு பாடி கைதட்ட வைக்க வேண்டும்.
4. இதன் பின் கவலையை விடுங்கள் சனம் தானாக வரும். பின்னர் 150 பவுண் கொடுத்தால் அரைமணி நேரம் தமிழ் Lords TV யில் உங்களை அலம்ப விடுவார்கள்.

விசயம் அவ்வளவு தான். அதற்கு பின் உங்களை எல்லோரும் தமிழ் கடையில் அடையாளம் காண்பார்கள். அரங்கேற்றம், சாமத்தியம் எல்லாத்துக்கும் அழைப்பார்கள். நிச்சயம் நீங்களும் ஒரு பிரமுகர் தான்.

# தினமுரசுக்கு பாரிஸில் தடை

ஐரோப்பிய நாடுகளில் கூடுதலான வாசகர்களயும் விற்பனையையும் கொண்ட தினமுரசு பத்திரிகையை பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உள்ள தமிழர் வர்த்தக நிலையங்களில் விற்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடையின் பின்னணியில் வி.புலிகள் இருப்பதாக பாரிஸில் இருந்த கிடக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. தினமுரசு பத்திரிகக்கு எதிரான தடை இது முதற் தடவையல்ல. ஏற்கனவே இவ்வாறான தடைகள் ஐரோப்பாவிலும் இலங்கையின் வடக்கு கிழக்கிலும் இடம்பெற்று வந்தது. ஐரோப்பிய நகரங்களில் பிரான்ஸ் தீவிர தமிழ் வாசகர்களக் கொண்ட நகராகும். அங்கு இத்தடை வாசகர்கள் மத்தியில் சிறு சலசலப்பை ஏற்படுத்தவே செய்துள்ளது.

இத்தடை லண்டனுக்குத் தொடருமா என்பது பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இது தொடர்பாக பத்திரிகை விநியோகஸ்தர் சிவகுமாரிடம் தொடர்பு கொண்ட போது லண்டனில் நான்கு கடைகள் தினமுரசு பத்திரிகை விற்பதை நிறுத்திக் கொண்டதாகத் தெரிவித்தார். தினமுரசை விநியோகிக்க வேண்டாம் என உங்களுக்கு அறிவுறுத்தல் தரப்பட்டாதா எனக் கேட்டதற்கு அவ்வாறு யாரும் அறிவுறுத்தவில்லையென அவர் தெரிவித்தார். அப்படி அறிவுறுத்தப்படும் பட்சத்தில் அதனை ஏற்றுக்கொள்வது தவிர்க்க முடியாதது என்றும் அவர் தெரிவித்தார்.

தினமுரசு பத்திரிகை ஈபிடிபி என்ற அமைப்பினால் வெளியிடப்படுகின்ற போதிலும், இலங்கயிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் கூடுதலான விற்பனையையும் அதிக அளவு வாசகர்களையும் கொண்டதாக தினமுரசு உள்ளது. இதனால் தினமுரசு பத்திரிகய தருவித்து விநியோகிக்கும் முகவர்கள் கூடுதலான இலாபத்தையும் பெறுகின்றனர். ஐரோப்பாவில் இலவசமாக பல பத்திரிகைகள் கிடைக்கின்ற போதிலும் தினமுரசை மக்கள் பணம் கொடுத்து வாங்கிப் படிக்கின்றார்கள்.

"பத்திரிகையை கடைகளில் விற்பதை தடுப்பதன் மூலம் அது மக்களைச் சென்றடை வதை எந்த வகையிலும் தடுத்துவிட முடியாது. மாறாக அந்தப் பத்திரிகைக்கு ஒரு வகையில் விளம்பரம் செய்வதாகத்தான் அது அமையும். negative marketing" என்கிறார் வாசகர் கருணாகரன்.

பிரான்ஸில் பாவனையாளர் பாதுகாப்புக் காக பல சட்டங்கள் இருக்கின்றன. பிரான்சின் பொருளாதாரம், மற்றும் நிதி அமைச்சகத்தில் பாவனையானர் பாதுகாப்பு பிரிவில் (Ministere De L'Economie Des Finances et d'Industrie - Protection du consommateur) தினமுரசு பத்திரிகையின் தடை தொடர்பாக வாசகர்கள் முறையிடுவதாக பிரான்ஸ் செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழ் சமூகத்தின் மத்தியில் தகவல் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பவை எட்டாக் கனியாகவே உள்ளது.

# கணிதத்துக்கான அதிஉயர் சர்வதேச விருது இந்தியப் பெண்மணிக்கு

இவ்வாண்டு கணிதத்துக்கான உயர்விருது இந்தியப் பெண்மணியான சுஜாதா ராமதுரைக்கு வழங்கப்பட்டுள்ளது. கணிதத்துக்காக நோபல் பரிசெதுவும் இல்லாத நிலையில் இத்தாலியில் அமைந்துள்ள சர்வதேச பௌதிகவியல் கோட்பாடுகளுக்கான நிறுவனம் ICTP இந்த உயர்விருதினை வருடாந்தம் வழங்கிவருகின்றது.


நோபல் பரிசக்கு இணையான பத்தாயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான இப்பரிசு இந்திய கணித மேதையான ஸ்ரீநிவாச ராமானுஜனின் நினைவாக ஆண்டுதோறும் 45 வயதுக்குட்பட்டவர்களுக்கு வழங்கப்படு கின்றது.

இவ்வாண்டு இப்பரிசை இத்தாலியில் பெற்றுக்கொண்ட 44 வயதான கணிதப் பேராசிரியை திருமதி சுஜாதா அடிப்படை ஆய்வுகளுக்கான டாட்டா நிறுவனத்தில் 1985முதல் பணியாற்றிவருகின்றார்.

## பூமாலை 2007

தமிழ் சமூக மையம் நடாத்தும் "பூமாலை 2007" கலை நிகழ்ச்சி பிறன்போர்ட் Waterman's Theatreஇல் ஜனவரி 27ல் இடம்பெறவுள்ளது. தமிழ் சமூக மையத்தின் நிதித் தேவைகளுக்கான ஒரு நிதி சேகரிப்பு நிகழ்வாகவே இது ஏற்பாடுசெய்யப்பட்டு உள்ளது என்கிறார் இணைப்பாளர் தவராணி நகுலேந்திரன்.

# மதுரையில் இருந்து அனுராதபுரத்திற்கு மின்சாரம்



பெற்றோலியச் சந்தையை இந்தியாவிடம் இழந்து நிற்கும் இலங்கை அரசு இப்போது மின்சாரத்துக்கும் இந்தியாவையே நாடவிருக்கிறது. அண்மையில் அமைச்சரவையில் மின்சக்தி எரிபொருள் அமைச்சுக்குப் பிறப்பித்துள்ள ஆணையில், பாரிய மின்சக்தி விநியோகத் திட்டத்தை இந்தியாவுடன் மேற்கொள்ளும் வாய்ப்புகளை ஆராயப் பணித்துள்ளது.

இலங்கையின் ஊடகத்துறை அமைச்சர் அனுர யாப்பா இது பற்றிப் பத்திரிகையாளர்களிடம் குறிப்பிடும் போது, இந்தத் திட்டத்தின்கீழ் மதுரையும் அனுராதபுரமும் மின்சக்தி வழங்கல் கேபிள்களால் இணைக்கப்படுமெனவும் அதன்மூலம் வருடாந்தம் ஆயிரம் மெகா வாட்ஸ் மின்சாரத்தை இலங்கைக்குப் பெற்றக்கொள்ள வாய்ப்பேற்படும் என்றும் தெரிவித்தார். இதற்கான செலவு 430 மில்லியன் டொலர் என்று மேலும் குறிப்பிட்ட அவர் இதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்க நிறுவனமொன்று முன் வந்திருப்பதாகவும் தெரிவித்தார். இதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை - இந்திய தரப்புகள் டிசம்பரில் கையெழுத்திட்டள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் இலங்கைக்கான மின்சாரத்தேவை 10 சதவீதத்தால் (200 மெகா வற்ஸ்) அதிகரித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதனை ஈடுசெய்வதற்கு இது உதவும் என அமைச்சர் யாப்ப தெரிவித்தார். மதுரையிலிருந்து வந்தாலென்ன மன்னார் குடியிலிருந்து வந்தாலென்ன வடகிழக்குக்கு மின்சாரம் என்ன ஒழுங்காகக் கிடைக்கவா போகின்றது என்று அங்கலாய்க்கின்றனர் வடக்கு கிழக்கு தமிழர்கள்.

# இலங்கை 4 மிக்-27 விமானங்களை வாங்குகிறது

இலங்கை தனது விமானப்படைக்கு 9.8 மில்லியன் டொலர் செலவில் மேலதிகமாக நான்கு மிக் 27ரக விமானங்களைக் கொள்வனவு செய்ய உள்ளது. இலங்கை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல டிசம்பர் முற் பகுதியில் இதுபற்றிக் குறிப்பிடும்போது, வடக்கு கிழக்கில் அதிகரித்துவரும் புலிகளின் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுப்பதற்கு இந்தக் கொள்வனவு அவசியமாக இருப்பதாகத் தெரிவித்தார். வடக்கு-கிழக்கு பகுதிகளில் வி.புலிகளின் பாதுகாப்பு நிலைகளின் மீது வான்வழித் தாக்குதல்களை நிறைவேற்றப் போதிய விமானங்கள் கையிருப்பில் இல்லாததையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

இந்த விமானங்கள் புதிய விமானங்கள் அல்ல என்பதையும் அவை இரண்டாம்தர விமானங்களே என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டார். இதற்குத் தாம் வழங்க முன்வந்துள்ள விலை, அண்டைய நாடொன்று தமது கையிருப்பிலுள்ள பழுதடைந்த விமானத்தைத் திருத்திப் புனரமைக்கக் கோரிய கேள்விப்பத்திர விலையைவிடக் குறைவானதே என்றும் கருத்துத் தெரிவித்தார்.

தற்போது இஸ்ரவேலிய தயாரிப்பான கிபீர் விமானங்களும், சீனத் தயாரிப்பான எப் 7ரக விமானங்களுமே வடபுலத் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாக ரம்புக்வல தெரிவித்தார். அண்டை நாடென்று இவர்கள் முணுமுணுப்பது இந்தியா இல்லது பாகிஸ்தான் என சந்தேகிப்பது நியாயமானதே.

# நேபாளத்தில் புத்தரின் மறுஅவதாரம்



புத்தரின் மறு அவதாரம் என்று கருதப்படும் நேபாள இளைஞன் மீண்டும் தென் நேபாளக் காட்டுப் பிரதேசத்தில் காணப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பத்து மாதமாக உண்ணா நோன்பு காத்து அன்ன ஆகாரமின்றித் தியானத்தில் இருந்து வந்த இந்நேபாள இளைஞர் கடந்த மார்ச் 2006இலிருந்து திடீரென்று காணாமல் போயிருந்தார்.



தற்போது மீண்டும் தரிசனம் வழங்கிவரும் ராம் பகதூர் பொம்ஜன் (படம்) என்ற இவ்விளைஞர் காட்டுப் பிரதேசத்தில் தற்பாதுகாப்புக்காக உடை வாளொன்றையும் கொண்டு திரிவதாகவும், அதிசயங்கள் பல செய்து வருவதாகவும் அவரைத் தரிசிக்கும் வாய்ப்புப் பெற்ற கிராமத்தவர்கள் தெரிவித்துள்ளார்கள். கிறிஸ்துவுக்கு முன் 560இல் கௌதம புத்தர் அவதரித்த (லும்பினி என்று வழங்கப்பட்ட) தென் நேபாளக்காட்டில் இருந்தபடியே இன்று சர்வதேச பௌத்தர்களினதும், உயிரியல் விஞ்ஞானிகளினதும் கவனஈர்ப்பினை இவ்விளைஞர் பெற்று வருகின்றார்.

ராம் பகதூர் பொம்ஜன் பற்றிய வியப்பான செய்திகள் பரவி வருவதை அடுத்து உள்ளூர் தலைமை நிர்வாகியான கொய்ராலா, நோபாள தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனத்திடம் உண்மை நிலையைக் கண்டறிந்து விஞ்ஞானபூர்வமான முடிவினை உலகிற்கு அறிவிக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமது அவதார புருஷனின் நாளாந்த கடமைகளுக்கு ஊறு விளைவிக்காத வகையிலும், புத்தரின் மறு அவதாரமாகக் கருதும் தமது புனிதரைத் தொடாமலும் இவ்வாய்வினைச் செய்ய வேண்டும் என்றும் அவரது பக்தர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு கொய்ராலா இணக்கம் தெரிவித்துள்ளார்.

2007 ஜனவரியில் மேற்கொள்ளப்பட விருக்கும் இந்த விஞ்ஞானபூர்வ ஆய்வு பௌத்த மத விசுவாசிகளுக்குத் திருப்திகரமாக இருக்குமா என்பதை அறிக்கை முடிவிலிருந்தே அறிய முடியும்.

இதற்கிடையில் இப்புனித இளைஞனுக்கு ஏராளமான காணிக்கைகள் வந்து குவிவதாகவும், சுமார 500,000 ரூபா வரையில் வங்கிக் கணக்கில் இடப்பட்டுள்ளதாகவும் செய்தியொன்று தெரிவிக்கின்றது. இவ்விளைஞர் தியானம் செய்யும் மரத்தின் சுற்றாடலில் சுகந்த மணம் வீசிக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்விளைஞனைச் சுற்றி ஒரு வர்த்தக வலயமே அமைக்கப்பட்டிருப்பதாகவும், அங்கு தரிசனத்திற்காக வரும் மக்கள் கூட்டத்தின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பல பெட்டிக்கடைகள்கூட முளைத்திருப்பதாகவும் மேலும் செய்திகள் தெரிவிக்கின்றன. புத்தரின் மறு அவதாரமாகக் கருதிவரும் இந்த 17 வயத இளைஞரின் நலன்களைப் பேணும் வகையில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு அது கடுகதியில் விரிவான வலைப்பின்னலை உலகெங்கும் உருவாக்கி வருவதாகவும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

கௌதம புத்தரின் தாயாரின் பெயர் மாயாதேவி. பௌத்தரின் மறு அவதாரமெனக் கருதப்படும் இவ்விளைஞரின் தாயின் பெயரும் அதுவே.



# இந்து ஆலயங்களை அழிக்கிறது மலேசிய அரசு

## வாரம் ஒரு இந்து ஆலயம் அழிக்கப்படுகிறது - அழிக்கப்போவதாக மிரட்டப்படுகிறது - இடத்தை மாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறது.

மலேசிய அரசு பல்வேறு காரணங்களைக் கூறி இந்து ஆலயங்களை இடித்து வருகின்றது. அங்கு வாரம் ஒரு இந்து ஆலயம் அழிக்கப்படுகிறது அல்லது அழிக்கப்படப் போவதாக நீதிமன்றத்தால் மிரட்டப்படுகிறது அல்லது ஆலயத்தை வேறு இடத்திற்கு மாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறது என Hindu Rights Action Force இணைப்பாளர் மாணிக்கவாசகம் தெரிவிக்கிறார். அவர் மேலும் கூறுகையில் மூன்று வாரத்திற்கு ஒரு இந்து ஆலயம் அழிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். கடந்த ஆண்டு பெப்ரவரி முதல் நவம்பர் வரையான ஒன்பது மாதங்களில் 74 இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு உள்ளது அல்லது அழிக்கப்படப் பொவதாக மிரட்டப்பட்டு உள்ளது அல்லது இடம்மாற்ற நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளது என Hindu Rights Action Force தெரிவிக்கிறது.



இது தொடர்பாக, அங்கிருந்து வெளியாகும் செம்பருத்தி சஞ்சிகை விரிவான அறிக்கையொன்றை ஜனவரி 2007 இதழில் வழங்கியிருக்கின்றது. மக்களின் மத சுதந்திரத்தை வலியுறுத்தும் சட்டக்கூறுகளை (Article 11 of the Federal Constitution) மலேசிய அரசு பெயரளவில் கொண்டிருந்தாலும், அது இஸ்லாமிய சார்பான நாடாகவே தன்னை மறைமுகமாகக் காட்டி வருகின்றது.




இந்து ஆலயங்களின் அழிப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம்.

நகரை அழகுபடுத்தல் என்ற போர்வையில் அப்பாவித் தமிழரின் சேரிக் குடியிருப்பகளை அழித்து அவர்களை வீடற்றவர்களாக்கி வரும் அரச நிர்வாகம் தற்போது அவர்களின் புனிதத்தன்மைமிக்க கோவில்களிலும் கை வைத்துள்ளது.

கடந்த 2006ம் ஆண்டு ஜுன்மாத முடிவு வரை நூற்றுக்கும் அதிகமான ஆலயங்களை இடித்தும் இடிப்பதற்கான அனுமதியை வழங்கியும் உள்ளது. இவ்வாலயங்களில் பல 150 ஆண்டுகள் பழமைவாய்ந்ததாகும். பெருந்தெருக்கள் அமைப்பதற்காகவும், தனியார் காணியில் உள்ளதாகவும் பல்வேறு காரணங்களைச்சாட்டி இவ்வாலய அழிப்பு வேலைகள் முடுக்கி விடப்பட்டு உள்ளன. அழிப்பதற்காக அண்மையில் கை வைத்துள்ள 17 சைவ ஆலயங்கள் பற்றிய விரிவான பட்டியலொன்றை செம்பருத்தி இதழ் கொண்டிருக்கின்றது.

சிரம்பான் ஸ்ரீ முன்னீஸ்வர ஆலயம் 150 ஆண்டுப் பழமைவாய்ந்தது. இவ்வாலயம் இடிக்கப்படுவதுடன் 218 ஆண்டுகள் பழமைவாய்ந்த கோவிலின் புனித மரத்தையும் முற்றாகத் தறித்துவிட சிரம்பான் மாவட்ட அலுவலகம் அண்மையில் முடிவு செய்துள்ளது. இடிப்பதற்கு ஆயிரம் காரணங்களைத் தேடும் அரச நிர்வாகம் ஒரு இந்துக் கோவிலையாவது இடிக்காது பேணுவதற்கான வழியைத் தேடமறுப்பதாக அங்குள்ள தமிழர்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

வலிமைமிக்க தமிழர் நலன்பேணும் பிரதிநிதித்துவம் அற்றநிலையில் மலேசிய மண்ணின் தமிழர் கலாச்சாரச் சின்னங்கள் திட்டமிட்டு சீரழிக்கப்பட்டு வருகின்றன. இதைத் தடுப்பதற்கு உலகளாவிய சைவ நிறுவனங்கள் தமது பங்களிப்பை வழங்கவேண்டியது அவசியம். புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள சைவ நிறுவனங்கள் இவ்விடயத்தில் காத்திமான பங்களிப்பைச் செய்ய முடியும்.



## மரணித்தவரின் உடலுக்கு மதங்கள் நடத்தும் போராட்டம்


தன் 71ஆவது வயதில் நீரிழிவு நோயினால் மரணித்த ராயப்பனின் உடலை, அவர் இஸ்லாமியராக மாறியதாகக் காரணம் காட்டி அவரது கிறிஸ்தவ மனைவியிடம் ஒப்படைக்க மறுத்த சம்பவம் மலேசியாவில் கோலாலம்பூர் மருத்துவமனையில் நிகழ்ந்து உள்ளது. இதற்கு உடந்தையாக சிலாங்கூர் இஸ்லாமிய விவகார மன்றம் செயற்பட்டிருந்தது. மரணித்த தன் கணவரின் உடலைப் பெறுவதற்கு ஒன்பது நாட்களாகப் பெரும் சட்டப் போராட்டமே நடத்தி வென்றிருக்கிறார் அவரது மனைவி லூர்து மேரி. இவரது போராட்டம் கோலாலம்பூர் உயர் நீதிமன்றத்தையும், அமைச்சர் அவையையும் அண்மைக்காலமாக ஒரு கலக்குக் கலக்கியுள்ளது.

பிறவிக் கிறிஸ்தவரான ராயப்பன் 1990இல் சிலகாலம் முஸ்லிம் பெண் ஒருவருடன் வாழ்ந்த வேளையில் முகமட் ராயப்பன் அப்துல்லா என்ற இஸ்லாமியராக மாறியிருந்தார். பின்னர் 9 ஆண்டுகளில் திருமண முறிவின் பின்னர் மனம்மாறி மீண்டும் ராயப்பன் அந்தோணி என்று கிறிஸ்தவராக மாறிவிட்டார். 24.11.2006 அன்று அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போது கிறிஸ்தவராகவே இருந்துள்ளார். 29.11.2006இல் அவர் மரணித்ததும் சிலாங்கூர் இஸ்லாமிய சமய இலாகா அவரை இஸ்லாமியரென்று கூறி அவரது உடலுக்கு உரிமைகொண்டாடியது. அவரது மனைவியான லூர்து மேரியின் போராட்ட வெற்றி மலேசிய இஸ்லாமிய சட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகியுள்ளது.

மலேசியாவில் சிவில் நீதிமன்ற நெறிமுறைகளுக்கு இணையாக ஷரியா இஸ்லாமிய நீதிமன்றமும் செயற்படுகின்றது. ஷியா நீதிமன்றம் இஸ்லாமியர்களுக்கு மட்டுமே உரியது.

## காசி ஆனந்தனின் நறுக்குக் கதைகள் ஆங்கிலத்தில்

ஈழத்தின் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகள் பல ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வந்துள்ளன. அவ்வகையில் அவரது நறுக்குக் கதைகள் என்ற பிரபல்யமான நூல் Fables என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது. கவிதைகளில் தெறிக்கும் உணர்வின் பிழம்புகள் அவரது நறுக்குக் கதைகளிலும் காணமுடிகின்றன. Fables என்ற நூலின் வெளியீட்டின்மூலம் தமிழகத்தில் தற்போது வாழும் கவிஞர் காசி ஆனந்தனின் இலக்கியப் புலமை பரந்த வாசகர் வட்டத்தினரிடையே கொண்டுசெல்லப்பட்டு உள்ளது.



## உள்நாட்டு யுத்தத்தால் சொர்க்கத் தீவு என்ற பெயர் பாழாகிறது

இலங்கையில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு யுத்தத்தால் சொர்க்கத் தீவு என்ற பெயர் பாழாகிறது. இலங்கையின் சுற்றுலாத்துறை பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்கி உள்ளது. 1970 முதல் backpackerஇனால் கவரப்பட்டு வந்த தெற்கில் உள்ள ஹிக்கடுவ போன்ற சுற்றுலா மையங்களே உலகளாவிய உலாசப் பயணிகளால் கைவிடப்படுகிறது. தினமும் பல சுற்றுலாப் பயணங்கள் கடைசி நிமிடத்தில் கைவிடப்படுகின்றன என அப்பகுதியில் நட்சத்திர ஹொட்டல்களையும் உல்லாச விடுதிகளை நடத்துபவர்கள் தெரிவிக்கின்றனர். உள்நாட்டு யுத்தம் காரணமாக மேற்கு நாடுகள் தமது பிரஜைகளுக்கு இலங்கைக்கு பயணிப்பது தொடர்பான எச்சரிக்கையை விடுத்துள்ளன.

நவம்பர் 2006ல் இலங்கைக்கு வந்த உல்லாசப் பயணிகளின் தொகை அதே காலத்தில் ஓராண்டுக்கு முன் வந்தவர்களிலும் பார்க்க 22.4 வீதம் குறைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டு உள்ளது. இலங்கையின் உல்லாசப் பயணத்துறை 450 மில்லியன் டொலர் மதிப்பு மிக்கது. 23 பில்லியன் டொலர் பொருளாதாரத்தில் உல்லாசப் பயணத்துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக வெளிநாட்டு நாணயத்தை நாட்டுக்குள் கொண்டு வருகிறது. உல்லாசப் பயணத்துறையை ஒட்டி 150,000 பேர் நேரடி வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இன்னும் 500,000 இது சார்ந்த துறையில் மறைமுகமாகத் தங்கி உள்ளனர்.


2002 யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அடுத்து இலங்கை மிகவும் சுறுசுறுப்பான உல்லாசமையமாக விளங்கியது. 2004 டிசம்பரில் 66,000க்கும் அதிகமான உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்தனர். ஆனால் கடந்த நவம்பரில் 37,000 வரையான உல்லாசப் பயணிகளே இலங்கை வந்துள்ளனர். அதனால் இவ்வுல்லாசப் பயணிகள் எதிர்பார்ப்புக்கும் அதிகமான முறையில் வரவேற்கப்படுகின்றனர்.

### இலங்கையில் பொருளாதார வீழ்ச்சி

தேயிலை உற்பத்திக் குறைவும் யுத்தம் காரணமாக உல்லாசப் பயணிகளின் வீழ்ச்சியும் இலங்கையின் பொருளாதாரத்தை வீழ்ச்சி அடைய வைத்துள்ளது. 2006 பொருளாதார வளர்ச்சி 7.4 வீதம் ஆக இருக்கும் என மதிப்பிட்ட போதும் மேற்குறிப்பிட்ட காரணங்களால் பொருளாதார வளர்ச்சி 7.0 வீதமாகவே இருக்கும் என மத்திய வங்கி மதிப்பிட்டு உள்ளது. 1978ல் இலங்கை அதிகூடிய பொரளாதார வளர்ச்சி 8.2 வீதத்தைக் கொண்டிருந்தது.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# சோமாலியாவில் மீண்டும் அமெரிக்கா




கடந்த ஆறு மாதகாலமாக சோமாலியாவின் பெரும் பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருந்த இஸ்லாமியக் கிளர்ச்சியாளர் (இஸ்லாமிக் கோட்) மேற்குலகின் ஆதரவு கொண்ட எதியோப்பிய - சோமாலியக் கூட்டுப் படையினரின் இரு வாரகால எதிர்த்தாக்குதல் நடவடிக்கை மூலம் துரத்தியடிக்கப்பட்டு உள்ளனர். கிளர்ச்சியாளரின் சோமாலிய இஸ்லாமியக் கவுன்சில் இரத்தக் களரியைத் தவிர்ப்பதற்காகத் தாம் பின்வாங்கி உள்ளதாக தெரிவித்துள்ளது.

அதேவேளை உகண்டா ஜனாதிபதி ஆபிரிக்க கூட்டுச்சக்தி ஒன்றை உருவாக்குவதனூடாக சோமாலியாவில் ஸ்திரநிலையை ஏற்படுத்துவது பற்றி கலந்துரையாடுவதற்காக அந்நாட்டுக்கு பயணமாகியுள்ளார்.

கிறிஸ்தவ எதியோப்பியாவின் அயல் நாடான கென்யா அகதிகள் வரவை தடுப்பதற்கு எல்லைப் பாதுகாப்பை இறுக்கியதுடன், வருகை தந்த 420 அகதிகளை திருப்பியனுப்பி உள்ளது. இதனை ஐ. நா.வின் அகதிகளுக்கான அமைப்பு கண்டித்துள்ளது. அவேளை இவ்எல்லைப்புறத்தில் எதியோப்பிய சோமாலித் துருப்புகளுக்கும் இஸ்லாமிய கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே சண்டைகள் நடந்த வண்ணம் உள்ளன.

தோற்கடிக்கப்பட்ட இஸ்லாமியக் கிளர்ச்சியாளர் வெளியேறுவதைத் தடுப்பதற்காக அமெரிக்கக் கடற்படையினர் இந்நாட்டுக் கடற்பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு உள்ளனர்.

மேற்குலக காலனித்துவ ஆட்சிகளின் விளைவாக சின்னா பின்னமாக்கப்பட்ட ஆபிரிக்கா கண்டத்தின் ஒரு உதாரணமாக சோமாலியா விளங்குகிறது.

1. நீண்டகால காலனித்துவ அடிமைப்பாடு
2. தான்தோன்றித்தனமான அரச எல்லைகள் நிர்ணயம்
3. சுதந்திரம்(!) வழங்கப்படல்
4. அடக்குமுறையான தேசிய அரசாங்கம்
5. கட்டவிழ்ந்த வன்முறையும் வறுமையும் பசி பட்டினியும்

1960ம் ஆண்டு சோமாலியா பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் அடைந்தபோது அந்நாடு பிரித்தானியா, இத்தாலி, எதியோப்பியா,கென்யா மற்றும் ஜிபோட்ரி (Jibouti) ஆகிய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்த பிரதேசங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 1991ல் சோமாலிய ஜனாதிபதி எதிர்த் தரப்பு குடும்ப குழுவால் கொல்லப்பட்டதை அடுத்து இன்று வரை சோமாலியாவில் ஒரு அரச நிர்வாகம் இல்லை.

இதற்கிடையே சோமாலியாவில் அல்கைடா உறுப்பினர்கள் தங்கி இருப்பதாகக் குற்றம்சாட்டி வான் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலில் முக்கியை அல் கைடா உறுப்பினர் பொல்லப்பட்டதாக தெரிவித்த வோசிங்டன் பின்னர் அவ்வுறுப்பினர் தப்பித்ததாகத் தெரிவித்தது. இத்தாக்குதலில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதற்கு முன்னரும் சோமாலியாவில் நேரடி அமெரிக்க இராணுவ நடவடிக்கை தோல்வி அடைந்தமை தெரிந்ததே

## ரோமானியாவும் பல்கேரியாவும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவு

ரோமானியாவும் பல்கேரியாவும் ஐரோப்பிய ஒன்றியத்தில் ஜனவரி முதல் இணைவதுடன் ஐ.ஒ. 27 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட கருங்கடல் வரை நீடிக்கப்பட்ட ஒரு கூட்டமைப்பாகிறது. இந்நாடுகளின் தலைநகரங்களான புடாபெஸ்ற், சோபியா என்பவற்றில் மக்கள் குதூகல கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். முதலாவது வருடத்தில் பிரிட்டனுக்கு ரோமானியாவிருந்து 56,000 பேரும் பல்கேரியாவிலிருந்து 180,000 பேரும் இடம்பெயருவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நாடுகளைச் சேர்ந்தோர் இங்கு தொழில் தேடி வரும்போது அவர்களுக்கு மேலதிகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் எனத்தெரிய வருகிறது. இவ்வித குடிவரவால் பிரிட்டன் நன்மையுறும் என பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் மார்கிரட் பெக்கெற் தெரிவித்துள்ளார்.

## இலங்கையர் உட்பட கனறி ஐலண்டில் 160 பேர் தஞ்சம்

ஸ்பெயின் நாட்டின் கனறி ஐலண்டில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 160 பேர் அரசியல் தஞ்சம் கோரி உள்ளனர். ஜனவரி 12ல் இவர்கள் பயணம் செய்த படகு கனறி ஐலண்டைச் சென்றடைந்தது.

அண்மைய ஆண்டுகளாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்கான நுழை வாயிலாக கனறித் தீவுகள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஸ்பெயினின் சட்டப்படி சட்டவிரோதமாக நுழைபவர்கள் 40 நாட்களுக்குள் தங்கள் நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட வேண்டும் தவறினால் அவர்கள் ஸ்பெயினில் சுதந்திரமாக இருக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

இவர்களை ஏற்றி வந்த படகு இலங்கையில் இருந்தே புறப்பட்டதாக கூறப்படுகிறது. கடந்த ஆண்டும் இவ்வாறான ஐரோப்பா நோக்கிய பல கடற் பயணங்கள் இலங்கையில் இருந்து புறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட வி.புலி உறுப்பினர் அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்பட்டார்

இந்தோனிசியாவில் கைது செய்யப்பட்ட வி.புலிகளின் உறுப்பினர் ஜனவரி 10ல் அமெரிக்க FBI அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். தவராஜா பிரதீபன் என்பவரே இவ்வாறு அமெரிக்க அதிகாரிகளிட் ஒப்படக்கப்பட்டு உள்ளார். அரிக்காவில் இருந்து இலங்கைக்கு ஆயுத விநியோகம் செய்ய முயற்சித்த குற்றத்திற்காக பயங்கரவாதக் குற்றங்கள் சுத்தப்பட்டு நியுயோர்க் நீதின்றத்தில் சந்தேக நபர் இல்லாமலேயே பிரதீபனுக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டன வழங்கப்பட்டது.

இந்தோனேசியாவில் இருந்து மலேசியாவின் கோலாலம்பூருக்கு விமானம் ஏற முறபட்ட பிரதீபன் ஜனவரி 4ல் இந்தோனேசிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். ஜனவரி 10ல் இந்தோனேசியாவின் சுஹார்னோ - ஹட்டா விமான நிலயத்தில் இருந்து FBI அதிகாரிகளின் பாதுகாப்புடன் பிரதீபன் அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கடந்த ஆண்டு இதே குற்றத்திற்காக 10க்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டது தெரிந்ததே. வி.புலிகள் விடயத்தில் அமெரிக்கா கடும் போக்கை தற்போது எடுத்து வருகிறது. இலங்கை அரசுக்கு முழுமையான இராணுவ ஒத்துழைப்பையும் வழங்குகிறது.

# இளைஞர் தூக்கிட்டுக் கொண்டார்

முன் பக்கத் தொடர்ச்சி.....



சம்பவ தினம் இரவு முழுவதும் மது அருந்தி விட்டு காலையில் 7:45 மணியளவில் அப்பகுதியில் இருந்த சங்கர் ஸ்ரோர் முன்பாக நண்பர்களுடன் கதைத்து பன்பலாக இருந்தவர் "நான் செத்துப் போனால் நோட்டிஸ் அடிப்பீர்களா" என்று கேட்டிருக்கிறார். கேள்வியின் விபரீதத்தப் புரியாத ஒரு நண்பர் “நீ என்ன பெரிய பாலா அண்ண தானே உனக்கு நோட்டீஸ் எல்லாம் அடிக்க” என நளினத்துடன் தெரிவித்திருந்தார். சில நிமிடங்களில் அவ்விடத்தில் இருந்து சென்றவர் றொக்ஹீத் பார்க்கில் இருந்த மரமொன்றில் கயிற்றைக் கட்டி குதித்துள்ளார். அப்பகுதியால் நடந்து சென்ற வயோதிப மாது பார்த்து விட்டு உடனடியாக பொலிஸிற்கு அறிவித்தார்.

டினேஸின் மரணம் தொடர்பாக பொலிசார் வேறு யார் மீதும் சந்தேகம் கொள்ளவில்லை என்றும் சம்பவத்தைப் பார்த்த ஒருவரின் சாட்சியும் இருப்பதால் அதனை அவர்கள் தற்கொலயாகவே கணிப்பதாகவும் டினேஸின் நண்பர் அனுசிறிகுமார் லண்டன் குரலுக்குத் தெரிவித்தார். தற்கொலை செய்து கொண்ட இடத்திற்கு லண்டன் குரல் நிருபரை அழத்துச் சென்று காட்டிய அனுசிறிகுமார் டினேஸ் கடின உழைப்பாளி நல்ல சுபாவமுடையவர் ஆனால் ஒரு மாதமாக குடுபத்தை விட்டு விலத்தி தனியாக இருந்ததாகத் தெரிவித்தார். டினேஸ் தனது நண்பர்கள் பலருக்கும் தனது தற்கொலை பற்றிய எண்ணத்தை நகைச்சுவையாக வெளிப்படுத்தி வந்து உள்ளார்.

இவர் தற்கொலை செய்துகொண்டது ஆச்சரியமானதல்ல என டினேஸ் குடுபத்தினரின் பெயர் குறிப்பிட விரும்பாத குடுப நண்பர் ஒருவர் லண்டன் குரலுக்குத் தெரிவித்தார். குடுப உறுப்பினர்கள் அனவருமே நல்லவர்கள் நன்றாக பழகுபவர்கள் ஆயினும் வர்களுக்கிடையேயான உறவு பலமானதாக இருக்கவில்ல என்றும் டினேஸ் அடிக்கடி பிரிந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். டினேஸின் தற்கொல எப்போதோ ஒரு நாள் நடக்மகு் என எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகவும் அவர் தெரிவித்தார்.

சத்தியமூர்த்தி குடுபத்தின் இரண்டாவது மகன் டினேஸ். இவருக்கு ஒரு இளய சகோதரியும், மூத்த சகோதரனும் உள்ளனர். மூத்த சகோதரன் இலங்கையில் உள்ளார். ஏனயவர்கள் பிரித்தானியாவில் ரெயினேர்ஸ்லேனில் வாழ்கின்றனர்.

பிரேதபரிசோதணகள் பூர்த்தியாகத தால் உடல் இன்னமும் குடுபத்தினரிடம் ஒப்படைக்கப்படவில்லை.

பிரித்தானியாவில் தமிழ் மக்களிடயே இடம்பெறும் தற்கொலைச் சம்பவங்கள் கணிசானவை. நடுத்தர வயதுடைய இளைஞர்கள் மத்தியிலேயே இந்த தற்கொலைச் சம்பவங்கள் அதிகம் காணப்படுகிறது. பொருளாதாரச் சிக்கல், குடுபச் சிக்கல், விரக்தி, ஒருதலைக் காதல், காதல் தோல்வி என்பன தமிழ் இளைஞர்களிடயே ஏற்பாடும் பொதுவான தற்கொலைக்கான காரணிகளாக உள்ளது.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# We can help you if you wish to return to Sri Lanka. And assist you further once you are back home.



The International Organization for Migration manages migration in a number of ways. In the UK, IOM helps unsuccessful asylum seekers and irregular migrants return to their home countries by coordinating all their travel arrangements including paying for their flight tickets. Asylum seekers are also eligible for extra ssistance in their countries of origin. To find out if you qualify for IOM's assistance, call 0800 783 2332. *London office*: 020 7233 0001. *Liverpool office*: 0151 225 0142. *Glasgow office*: 0141 548 8116

IOM International Orgnization for Migration

0800 783 2332 - www.iomlondon.org

This programme is co-funded by the European Refugee Fund